2019 பிப்ரவரி 14] [திரு. அர. சக்கரபாணி]

காப்பீட்டுத் தொகையான 28 கோடியே 33 இலட்சத்து 94 ஆயிரத்து 825 ரூபாய் இன்னும் வராமல் இருக்கின்றது. இதனால் அந்த விவசாயிகளெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, தேசிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் premium செலுத்தியிருக்கின்ற விவசாயிகளுக்கு அந்த இழப்பீட்டுத் தொகையை உடனடியாகப் பெற்றுத் தருவதற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

(ஊ) விளவங்கோடு தொகுதி, முல்லையாற்றின் குறுக்கே பள்ளிக்கூட்டத்தில் தடுப்பணைக் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதியில், தாமிரபரணி ஆற்றின் ஒரு பகுதியாக இருக்கும் முல்லையாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுவதற்கு பல ஆண்டுகளாகக் கோரிக்கைகளை வைத்து வருகிறோம். முல்லையாற்றில் குறிப்பாக, பள்ளிக்கூட்டம் என்ற இடத்தில் அந்தத் தடுப்பணை அமையப்பெற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இப்பகுதியைச் சார்ந்த அமைப்பினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். அதற்குண்டான நடவடிக்கையை எடுத்தால், நெய்யாற்றிலிருந்து வர வேண்டிய தண்ணீர் கேரள மாநிலத்திடமிருந்து கிடைக்கப் பெறாத சூழ்நிலையில், அதற்கான வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய நிலையில், குடிநீர் மற்றும் தண்ணீருக்கு பிரச்சினை இருக்கிறது.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விளக்கமாக எல்லாம் பேச முடியாது. நான் சொல்லிவிட்டேன். நீங்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பில் என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) இல்லை எனக்கு time இல்லை. 12 மணிக்கு வேறு அலுவலை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணை அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுகூர்ந்து முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.